**Sensitization program on RTI Act 2005 for Officer of PIOs and AAs of NIEPMD and CRCs under the Administrative control of NIEPMD**

14-05-2021 மாலை நியூஸ் 2


## ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான

# தேசிய நிறுவனத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்ட விழிப்புணர்வு விழா

முட்டுக்காடு, மே.14–

முட்டுக்காட்டில் இயங்கிவரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில்தகவல்அறியும் உரிமைச்சட்டவிழிப்புணர்வு விழா நடைப்பெற்றது.

தகவல்அறியும்உரிமைச் சட்டம், 2005இந்திய நாடாளுமன்றத்தால்அரசிடம் அல்லதுஅரசுஉதவிபெறும் நிறுவனங்களிடமிருந்து மக்கள் உரிமையுடன் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக்கஉருவாக்கப்பட்ட சட்டம் ஆகும்.இச்சட்டம் 2004 திசம்பர் மாதம், நாடாளுமன்றத்தில்அறிமுகம் செய்யப்பட்டு 2005 மே 11, அன்றுமக்களவையிலும்,2005 மே12,அன்றுமாநிலங்களவை நிறைவேற்றப்பட்டது.2005 சூன், 15 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது. 2005 சூன் 21,அன்று அரசுப்பதிவிதழில் வெளியிடப்பட்டு 2005 அக்டோபர்12,அன்றுமுதல் நடைமுறைக்கு வந்தது.



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியாவின்பிறப்பகுதிகள் அனைத்திற்கும்பொருந்தும். இதன்படி ஒவ்வொருஇந்தியக் குடிமகனும்/ மகளும் தகவல் பெறும்உரிமைபெற்றவர்கள். இந்தச் சட்டத்தின் கீழ், இந்தியாவின் எந்தவொரு குடிமகனும் ஒரு "பொது அதிகாரம்" (அரசாங்க அமைப்புஅல்லது "அரசின் கருவி") அமைப்பிலிருந்து தகவல்களைக்கோரலாம். உடனடியாகவோ அல்லது முப்பதுநாட்களுக்குள்ளோ பதிலளிக்க வேண்டும்.

முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கானதேசிய நிறுவனத்தில்நிறுவனத்தில் தகவல்அறியும்உரிமைச்சட்ட விழிப்புணர்வு விழா 13 மே 2021 அன்று காணொலி மூலம் நடை பெற்றது.

இந்த விழாவில் இந்நிறுவனம் மற்றும் இந்நிறுவனத்தின்கீழ்இயங்கும் கிளைநிறுவனபொதுதகவல் அதிகாரிகள்மற்றும்முதன்மை மேல்முறையீட்டுஅதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த விழாவை நசிகேதா ரௌட், இயக்குனர், அவர்கள் துவக்கிவைத்து சிறப்புரையாற்றினார். இந்த விழாவில் தகவல் அறியும்உரிமைசட்டத்தின் பயிற்சியாளர் முனைவர் வெங்கடேசன், கலந்து கொண்டு இந்தசட்டத்தில் பொதுதகவல் அதிகாரிகள் மற்றும் முதன்மை மேல் முறையீட்டு அதிகாரிகள் அவர்களின்பங்களிப்புபற்றி விரிவாகஎடுத்துரைத்தார்.

**Maalai News 14.05.21**